# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் **13.07.2026**</u>

**<u>முன்னிலை</u>**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## <u>வழக்கு எண். SA 3735/SCIC/2024</u>

திரு சி. ஆசைத்துரை — மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர், ....... பொதுஅதிகார அமைப்பு
தியாகராய நகர் மாவட்டம்,
சென்னை 600 017

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 26.12.2023 |
| 2, | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 02.02.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 08.02.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 22.03.2024 |
| 6. | அதன்பின்பு பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 23.11.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 09.01.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், காவல் துணை ஆணையாளர், காவல் துணை ஆணையாளர் அலுவலகம், தியாகராய நகர் மாவட்டம், சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 26.12.2023 தேதியிட்டு அனுப்பிய

மனுவில் தனது 14.02.2023 தேதியிட்ட Online புகார் disposed என்று குறிப்பிட்டு 29.11.2023 அன்று தனது அலைபேசிக்கு குறுந்தகவல் வந்தது என்றும், 14.02.2023 தேதியிட்ட தனது Online புகார் குறித்து 10 இனங்களில் தகவல்கள் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு D. கௌதமன், காவல் உதவி ஆணையாளர், வடபழனி சரகம், சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் மனுதாரருக்கு ஏற்கனவே 02.02.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதில் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள Online புகாரானது ஏற்கனவே எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள CSR No.206/2022ல் கண்ட முறையீடு தொடர்பானதாக இருந்ததால், மேற்படி Online புகாரின் மீது தனியாக விசாரணை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழாததால் CSR No.206/2022னை மேற்கோள்காட்டி புகாரானது முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார். அதே தகவலானது 23.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதற்கு மனுதாரர் CSR No.206/2022 என்பது சிசிடிவி சேதப்படுத்தப்பட்டது தொடர்பான புகார் என்றும், 14.02.2023 தேதியிட்ட Online புகாரானது இரும்பு கதவினை சேதப்படுத்தியது தொடர்பானது என்றும், இவ்விரண்டு புகார்களும் வேறுபட்டது என்றும், எனவே பொதுத் தகவல் அலுவலரால் தனக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் விசாரணையின்போது வாதிட்டார். எனவே, 14.02.2023 தேதியிட்ட புகாரின் மீது காவல் துறையினரால் தற்போது வரையில் எந்தவித விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லையென்பது தெளிவாகிறது.

4. எனவே, **காவல் இணை ஆணையாளர், தெற்கு சரகம் அவர்கள் தகுதிவாய்ந்த அதிகாரி (Competent Authority) ஒருவரை நியமனம் செய்து, மனுதாரரின் 14.02.2023 தேதியிட்ட Online புகார் தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர் தரப்பினர் இருவரிடமும் விசாரணை மேற்கொண்டு, அதுகுறித்த தகவலினை 31.07.2026க்குள் மனுதாரருக்கு வழங்குமாறும், அதுகுறித்த அறிக்கையினை 07.08.2026 அன்று தனது பிரதிநிதி ஒருவர் மூலம் ஆணையத்தில் நேரில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்படுகிறது.**

5. மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் 26.12.2023 தேதியிட்டு தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலரால் 02.02.2024 அன்று தான் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. **இதில் குறித்துரைக்கப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல்கள் வழங்கப்படவில்லையென்றும், மேலும், மிகுந்த காலதாமதமும் ஏற்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது. எனவே, தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குள் தகவல்களை வழங்குவது தொடர்பாக, அச்சட்டத்தின் விதிகளை பொதுத் தகவல் அலுவலர்**

**தவறாமல் பின்பற்றவேண்டும் என்றும், தவறினால் சட்டத்தின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3735/SCIC/2024</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

காவல் இணை ஆணையர்,
தெற்கு சரகம்,
புனித தோமையர் மலை,
சென்னை 600 016

பொதுத் தகவல் அலுவலர்,
காவல்துணை ஆணையர்,
தியாகராய நகர் மாவட்டம்,
சென்னை 600 017

**மனுதாரர்**

திரு சி. ஆசைத்தம்பி,
த/பெ சின்னச்சாமி,
எண்.3/2, கனகசபை தெரு,
பாரதி நகர், நெசப்பாக்கம்,
சென்னை 600 078

**நகல்**

காவல்துறை தலைமை இயக்குநர்,
காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம்,
மயிலாப்பூர், சென்னை 600 004

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை 600 035

TK/PS